# முதியோர் உதவித் தொகை பெற

**(பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)**

அனுப்புநர் தேதி: . . . . . .

**(பெயர் முகவரி எழுதவும்)**

பெறுநர்

பொது தகவல் அலுவலர்.
--------------------- தாலுகா அலுவலகம்
**(முகவரி எழுதவும்)**

ஐயா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் முதியோர் உதவித்தொகை தொடர்பான தகவல் கோருதல் - தொடர்பாக.

பார்வை: முதியோர் உதவித்தொகை மனு நாள்: . . . . . . . . மற்றும் RPT எண்: . . . . நாள்: . . . .

- - - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(3)-ன் கீழ் முதியோர் உதவித்தொகை பெறுதல் தொடர்பாக நான் கீழே கேட்டுள்ள தகவல்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள மனு தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளதா? ஆம் எனில் அந்த மனு தங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தன் பதிவேட்டின் நகல் ஒன்று வழங்கவும்.

2. மேற்படி மனுவின் மீது இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளை தெரிவிக்கும் கோப்பின் நோட்பைல் உட்பட அனைத்துப் பக்கங்களின் ஒளிநகல்கள் வழங்கவும்.

3. மேற்படி மனுமீது நடவடிக்கை எடுத்து முதியோர் உதவித்தொகை வழங்க அதிகாரம் படைத்த மற்றும் பொறுப்பான அதிகாரியின் பெயர், பதவியின் பெயர் தெரிவிக்கவும்.

4. அ) தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட வட்டாட்சியர் அலுவலக பகுதிக்குள் இதுவரை எத்தனைபேர் இன்றைய தேதியில் முதியோர் உதவித்தொகை பெற்று வருகின்றனர். ஆ) அவர்களின் பெயர் முகவரி தெரிவிக்கவும்.

5. அ) மேற்படி மனுவிற்குப்பின், தங்கள் அலுவலகத்தில் முதியோர் உதவித்தொகை வேண்டி இதுவரை எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன? ஆ) அவைகளில் எத்தனை பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இ) அவர்களின் பெயர் முகவரி வழங்கவும்.

6. முதியோர் உதவித்தொகை பெற அ) என்னென்ன ஆவணங்கள் இணைத்து அனுப்ப வேண்டும்? ஆ) அவைகளை நான் என் மனுவுடன் இணைத்து அனுப்பியுள்ளேனா? இ) இல்லை எனில் அதுபற்றி எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதா? ஈ) ஆம் எனில் அதன் நகல் வழங்கவும்.

7) அ) முதியோர் உதவித்தொகை பெற என்னென்ன தகுதிகள் வேண்டும்? ஆ) மேற்படி அனைத்துத் தகுதிகளும் எனக்கு உள்ளனவா? இ) இல்லை எனில் அது பற்றி எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் அதன் ஒளி நகல் வழங்கவும்.

8) எனது விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து உத்தரவு வழங்குவதற்கு காலதாமதம் செய்யப்படுவதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கின்றனவா? ஆம் எனில் அதனை தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 4(1)d ன்படி தெரிவிக்கவும்.

9) அ) தங்கள் அலுவலகத்தில் ஆணை எண்: 114/2006 (P&A.R) பின்பற்றப்படுகிறதா? ஆ) ஆம் எனில் அதன்படி எனக்கு எனது மனு தொடர்பாக ஏதாவது தகவல் அல்லது பதில் கடிதம் அனுப்பப்பட்டதா? இ) ஆம் எனில் அதன் நகல் ஒன்று வழங்கவும்.

10) 16. மேற்கண்ட ஆவணங்களை, பதிவேடுகளை நான் பார்வையிடவும், தேவையான சான்று அளிக்கப்பட்ட நகல் பெற்றுக் கொள்ளவும் நேரம் நாள் ஒதுக்கி எனக்குத் தெரிவிக்கவும்.

11) தங்கள் பதில் எனக்கு திருப்தி அளிக்காவிட்டால் நான் யாருக்கு, எந்த முகவரியில், மேல்முறையீடு செய்ய வேண்டும்?

12) நான் கேட்டுள்ள ஆவணங்களைப் பெற, எப்படி, யாரிடம், எந்த இடத்தில் பணம் செலுத்த வேண்டும் என்ற தகவலையும் வழங்கவும்.

மேற்கண்ட தகவல்களைப் பெற இத்துடன் ரூ.10/-க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

**(மனுதாரர் பெயர் மற்றும் ஒப்பம்)**